**O.S.No.44/2014**

**PW1 :** கலைமணி தேதி 25.11.2025

வாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 3, 4, 12 ,27 ,28 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

தாவா சொத்துகள் அனைத்தும் என் தாயாரின் பெற்றோருக்கு பாத்தியப்பட்ட சொத்து. வாசாஆ 1 மற்றும் 2 ஆவணங்கள் என் தாத்தா பாட்டியின் பெயரில் உள்ள பாகக்கறார் மற்றும் கிரைய பத்திரம் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் மொத்தம் 5 அயிட்டம். என் தாத்தா பாட்டியின் வாரிசுகளை தான் பிரதிவாதிகளாக சேர்த்து இருக்கிறேன். தாத்தா பாட்டியின் வாரிசுகளில் 4 பேர் மட்டும் இருக்கிறாரகள். அவர்கள் முருகேச முதலியார், ராஜம்மாள், ராதாமணியம்மாள், வேதாம்பாள் ஆகியோர். அவர்கள் தாய் மாமன்கள் மற்றும் சித்திகள். என் தாத்தா பாட்டியின் வாரிசுகளில் இறந்து போனவர்களின் வாரிசுகள் தான் பிரதிவாதிகள் 5 முதல் 21 வரை என்றால் சரிதான். 8 ம் பிரதிவாதி வழக்கு நிலுவையில் இருக்கும் போது இறந்துவிட்டார். அவருடைய வாரிசுகள் 27 மற்றும் 28 பிரதிவாதிகள் என்றால் சரிதான். 2.6.2010 ம் தேதி ஆண் வாரிசுகள் அனைவரும் சேர்ந்து ஒரு பதிவு செய்யப்படாத தானசெட்டில்மெண்ட் எழுதினார்கள். அந்த தானசெட்டில்மெண்ட் இறந்து போன பெண் வாரிசுகளிடம் கையெழுத்து வாங்காமல் எழுதப்பட்ட ஆவணம் விடுதலை பத்திரம். தாவா 1 ம் அயிட்ட சொத்தில் 5 சென்ட் பூமியும் ரூ.5 லட்சம் தருவதாக சொன்னார்கள். 26.3.2009 அன்று ஆறுமுக முதலியாரின் ஆண் வாரிசுகள் அனைவரும் சேர்ந்து அவர்களுக்குள் ஒரு வாசாஆ 3 பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தி கொண்டார்கள். அவருடைய பெண் வாரிசுகள் கையெழுத்து போடவில்லை.

1, 3, 4, 12 ,27 ,28 பிரதிவாதிகள் பொறுத்து பாகப்பிரிவினை செய்து கொடுப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.